RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# தொல்காப்பியம் காட்டும் சமூக ஒழுக்கங்கள்

**த. ராஜீவ் காந்தி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-05, இந்தியா

# The Social Order and Ethical Principles in the Tolkappiyam

**T. Rajivi Gandhi** [a, *]

[a] Department of Tamil, Sona College of Arts and Science, Salem-636005. India

*Corresponding Author:
rajivvallalar@gmail.com

**ABSTRACT**

Ethics refers to righteous conduct, adherence to moral principles, and the practice of virtuous behavior. Individual discipline and family values together form the foundation of social ethics, which in turn contributes significantly to the stability and progress of society. To understand the nature of social ethics during the period of Tolkappiyar, it is essential to examine the *Tolkappiyam*, one of the greatest intellectual contributions to Tamil civilization. This foundational grammatical treatise systematically classifies the Tamil language into the three divisions of Ezhuthu (phonology), Sol (morphology and lexicon), and Porul (semantics and social conventions), thereby establishing the framework of classical Tamil grammar. Among these divisions, the Porul Athikaram is of particular importance because it extends beyond linguistic principles to codify the norms governing human life, social customs, the five landscapes of Akam (love) poetry, and the themes of Puram (public life). Although grammatical traditions concerning *Akam* and *Puram* are believed to have existed before Tolkappiyar, he refined, organized, and systematized them into a comprehensive and enduring grammatical framework. This article examines the principles of social ethics reflected in the *Tolkappiyam*, highlighting how the work establishes moral values, social order, and codes of conduct that shaped the cultural life of ancient Tamil society.

**Keywords:** Tolkappiyam, Tolkappiyar, phonology, morphology, Tamil grammar, Akam, Puram

## முன்னுரை

ஒழுக்கம் என்பது ஒழுகுதல், நல்வழியில் நடத்தல், நல்லவனவற்றை பின்பற்றுதல் இதுவே ஒழுக்கமாகும். தனிமனித ஒழுக்கம், குடும்பம் ஒழுக்கம் இதுவே சமூகஒழுக்கமாக வளர்ந்து நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகிறது. தொல்காப்பியர் காலத்தில் சமூக ஒழுக்கம் இப்படி இருந்தது என்பதை ஆய்வு செய்வதற்கு முன் ஆய்வு களமாக இருக்கக்கூடிய தொல்காப்பியர் தமிழ் சமூகத்திற்கு கிடைத்த மாபெரும் வரமாகும். இலக்கியத்தை சிறந்த இலக்கணமாக மாற்றி எழுத்து, சொல், பொருள் என மூன்று இலக்கணங்களை வகுத்தார்.

ஆனால் பொருள் இலக்கணம் மனித வாழ்விலுக்கும், பழக்க வழக்கத்திற்கும், அன்பின் ஐந்தினிக்கும், புறத்திணைக்கும் இலக்கண வகுத்த பெருமை உலகில் தொல்காப்பியரைச் சாரும. தொல்காப்பியருக்கு முன்பாகவே அகப்புறம் இலக்கணம் இருந்தாலும் அவற்றை செம்மைப்படுத்தி ஒழுங்குப்படுத்தி அற்புத இலக்கணமாக தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்கி உள்ளார்.

## தொல்காப்பியத்தில் இல்வாழ்க்கை

தொல்காப்பியம் மக்கள் வாழ்வினை அகவாழ்வு, புறவாழ்வு என இரு வகைப்படுத்துகின்றது. ஒத்த அன்புடையராகிக் கணவனும் மனைவியும் இணைந்து வாழும் குடும்ப வாழ்வினை

அகவாழ்வென்றும், இவ்விதம் இணைந்த குடும்பங்கள் சேர்ந்து வாழ்வதற்குரிய அரசியல் வாழ்வினைப் புறவாழ்வென்றும் பழந்தமிழர் பண்பாட்டில் இடம்பெற்றுள்ளன.

அக ஒழுக்கத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களோடு கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஏழு வகையான ஒழுக்க மரபினைச் சங்ககாலத் தமிழர் கொண்டிருந்தனர் என்பதை,

"கைக்கிளை முதலாம் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளைந்த எழுதிணை என்ப" (தொல்.அகத்திணை -நூற்பா1)

என்ற தொல்காப்பிய அகத்திணை நூற்பா விளக்கியுள்ளது. ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியுமாகிய காதலர் இருவர், கருத்தொருமித்து இல்லத்திலிருந்து நல்லறஞ் செய்வதற்கு இன்றியமையாத அன்பின் வழிப்பட்ட உள்ளத்துணச்சியே அன்பின் ஐந்திணை என்று சிறப்பித்து கூறியுள்ளார்.

"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,

துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்

விருந்து எதிர்கோடலும்" (சிலம்பு கொ- கா)

கண்ணகியின் இல்லற கடமைகளை கோவலன் இல்லாத பொழுது இழந்து விட்டேன் என்று பதிவிடுகிறார். இக்கருத்தை வலு சேர்க்கும் விதமாக வள்ளுவரும்

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை"(தி - இல்வாழ்க்கை)

இல்லறத்தில் மாண்புகளை வள்ளுவர் எடுத்து கூறுகிறார்.

மேலும் நாலடியாரில்

"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்

தமக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய

காதல் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்

ஓதில் புகழ்சால் உணர்வு"(நான் - 105)

நிலையாமையை அதிகமாக பேசும் நாலடியார் இல்லறத்தை இன் முகத்தோடு போற்றுவதை பார்க்க முடிகிறது. மேலும் புறநானூற்றில்

"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கி

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" - (புறம்: 312)

இறுதிக்காலம் வரை செய்யக்கூடிய இல்லற கடமைகளை புறநானூறு பதிவு செய்கிறது.

அன்பின் ஐந்திணையாகிய அகவொழுக்கத்தில் களவு, கற்பு என இரு வகையாக பிரிக்கப்படுகிறது. உருவும் திருவும் உணர்வும் முதலிய பண்புகளால் ஒத்து விளங்கும் தலைவனும் தலைவியும் நல்லூழின் வழியால் தாமே எதிர்ப்பட்டு, அன்பினால் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய், உலகத்தார் அறியாது மறைந்தொழுகுதல் "களவாகும்". இத்தகைய மறைந்தொழுகுதலைத் தவிர்த்து பெற்றோர் உடன்பாடு பெற்று இருவரும் உலகத்தார் அறிய மணஞ் செய்து கொண்டு மனையறஞ் செய்தலே 'கற்பு' என வழங்கப்படுகிறது. தலைவனும் தலைவியும் இணைந்து வாழ்வதற்கு அவர்கள் தாமே விரும்பி தேர்ந்து பின்பு பெற்றோரிடம் சம்மதம் பெற்று திருமணஞ் செய்து கொண்டு வாழும் முறை தமிழர்களிடையே பயின்று வந்துள்ளதை நாம் இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## தொல்காப்பியத்தில் சமூக வாழ்க்கை

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் மக்களிடையே பலவிதப் பிரிவுகள் ஏற்ப்பட்டிருந்தன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என்ற பிரிவுகள் இருந்தன. இவையாவும் அவர்கள் செய்யும் தொழிலினால் ஏற்ப்பட்ட பிரிவுகளாகும். இவர்களைத் தவிர பாணர், கூத்தர், பொருநர், பார்ப்பார், அடிமைவேலை செய்வோர், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் போன்ற பல பிரிவுகள் மக்களிடையே இருந்துள்ளன.

## அந்தணர்

அறநெறியில் வாழ்வோர் அந்தணர். அரசர்களை அறநெறிப்படுத்தல், நாட்டு மக்கட்கு நல்லுரை வழங்கல், மக்கள் நல்வாழ்விற்காக இறைவனை வேண்டித் தவங்கிடத்தல் இவை அந்தணரது கடமைகளாகும். அந்தணர் வடிவத்தை,

“நூலே கரகம் முக்கோல் மணையே

ஆயுங் காலை அந்தணர்க் குரிய” (மரபியல் - நூற்பா 71(இளம்))

என்று தொல்காப்பியம் உணர்த்துகிறது.

## அரசர்

தமிழகத்தில் ஆட்சிமுறை ஏற்ப்பட்ட காலத்திலிருந்தே சேர, சோழ, பாண்டியர் ஆண்டனர். இவர்களே பழந்தமிழ்ப் பெருங்குடி மக்களின் மூத்த முதற்குடியினர் இவர்களை “வண்புகழ் மூவர்” என்று செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் பெருநில மன்னருக்குட்பட்ட குறுநில மன்னரும் இருந்து வந்தனர். படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், தார், முடி போன்றவை அரசர்க்கு சிறப்புடையனவகும் என்பதை,

“படையும் கொடியும் குடையும் முரசும்

நடைநவில் புரவியும் களிறும் தேரும்

தாரும் முடியும் நேர்வன பிறவும்

தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய“ (மரபியல்- நூற்பா - 72 (இளம்))

என்ற நூற்பாவில் எடுத்துரைத்துள்ளார் தொல்காப்பியர்.

## வணிகர்

பழந்தமிழ் வணிகர்கள் “கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது”

நேர்மையுடன் வாணிகம் செய்யும் பண்புடையவர்கள். வாணிகம் செய்யும் தொழிலை வைசியன் பெறுவான் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

“வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை” (மரபியல்- நூற்பா - (78 இளம்)

என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா. இவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரு வாணிகமும் கூல வாணிகமும் செய்து வந்துள்ளனர். மேலும் சிலப்பதிகாரம் வணிகர்கள் எப்படி செல்வ செழிப்போடு வாழ்ந்தனர் அவர்கள் அரசர்களோடு முதல் வரிசையில் அமர வைத்து அழகு பார்த்தனர் என்பதை நமக்கு சிலம்பு சிறப்பாக கூறுகிறது. மேலும் பட்டினப்பாலை நூலும் வணிகர்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. வணிகர்களை உயர்த்தும் விதமாக உத்தமக்கவிஞர் மகாகவி பாரதியார் அவர்கள்

சிந்து நதியின் மிசை நிலவினிலே

சேர நன்னாட்டிளம் பெங்களுடனே என்ற கவிதைகளில்

“கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம்

காவிரி வெற்றிலைக்கு மாருகொல்லுவோம்” (பா - க)

வணிகர்கள் பண்டமாற்று முறைகளை மேற்கொண்டதை பாரதி பதிவு செய்கிறார்.

## வேளாளர்

இவர்கள் “தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது” என்ற கொள்கையைக் கடைபிடித்து உழவுத்தொழிலைக் கொண்டு வாழ்பவர்கள்.

“வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது

இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி “ (மரபியல் - நூற்பா 81 (இளம்)

என்ற நூற்பா இதனை உணர்த்துகின்றது. பல்வகைத் தொழிலாளர்களும், வேளாளரேயாவர். எனினும் உழவொன்றே முதன்மையானதாகக் கூறப்பட்டது. இத்தகைய நான்கு வகைப் பிரிவுகள் தொல்காப்பியர் காலத்தில் பிறப்பினால் ஏற்பட்டவை அல்ல. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை காரணமாகவே இப்பிரிவுகள் அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. “சாதி” என்ற சொல் தொல்காப்பியத்தில் காணப்பெறும் என்றாலும் அஃது ஓரிடத்திலேனும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப் பெறவில்லை.

## வேளாளரின் பெருமை சேர்க்கும் திரிகடுகத்தில்

“வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்” (திரி- க-பா- 12)

வேளாளர்களின் வாழ்விலே படபிடிக்கக்கூடிய இலக்கியமாக திகழ்வது முக்கூடற்பள்ளாகும். வேளாளர்களை பெரும விரதமாக வள்ளுவரும் உழவுத் தொழிலுக்கு வந்தனம் செய்வதை

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்” (கு-1033)

திணைகளில் மருதத்திணையும் வேளாளர்களை உழவுத் தொழிலாளர்களை படப்பிடித்து காட்டுவது மட்டுமில்லாமல் மருதத்திணை வயலும் வயல் சார்ந்த நிலம் என்பதால் வேளாளர்களை மையமாகக் கொண்டு அத்திணை இயங்குவதை பார்க்க முடிகிறது.

“நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய” (மரபியல்-நூற்பா 44 (இளம்))

“நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே” (மரபியல்-நூற்பா 64 (இளம்))

என்ற நூற்பாக்களில் ‘சாதி’ என்னும் சொல் நீரில் வாழும் உயிர்களைக் குறிப்பிட்டுள்ளது என்று அறியலாம். தமிழர்களின் வாழ்வியல், அரசியல், பொருளியல் ஆகியவை தடையின்றி நடைபெறுவதற்காக வேண்டி நான்கு விதப் பிரிவுகளாக வகுத்து நம் முன்னோர்களின் அறிவின் திறமை பாராட்டுக்குரியதாகும்.

இவர்களைத் தவிர அடிமைகள், தொழில் வல்லார், நடனமாடுவோர், யாழ் வாசிப்போர், நாடகம் நடிப்போர் ஆகிய வகுப்பினரும் தமிழ்நாட்டிலிருந்தனர் என்பதை நாம் புறத்திணையினால் அறிந்து கொள்ளலாம். இதன்மூலம் தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முன்னர் காலத்தும் சமூக வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதைத் தெளிவாக உணரமுடிகிறது.

## தொல்காப்பியம் காட்டும் பழக்கவழக்கங்கள்

பண்டையத் தமிழர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றில், பண்டையத் தமிழர்களின் திருமணச் சடங்கு, அவர்களின் நம்பிக்கைகள் குடும்பப் பொறுப்பு. எவ்வாறு இருந்துள்ளது என்பதை தொல்காப்பிய நூற்பா வழி தெரிந்து கொள்ளலாம்.

## திருமணச் சடங்கு

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு பண்டைத் தமிழ் மக்களில் ஆடவரும், பெண்டிரும் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டு தம் காட்சியும் கருத்தும் ஒன்றுபட்டுத் தமக்குள் ஒருவரையொருவர் உயிர்போல் காதலிக்கும் காதலன்பு நிகழப்பெற்ற பின் தமக்குள் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர். இஃது ‘அன்பினைந்திணைக் காமக் கூட்டம்’ என வழங்கப்பட்டது. அதன் பின்னர் அவர்தம் பெற்றோரும் சுற்றத்தாரும் திருமணம் செய்து வைப்பார்கள்.

“கற்பெனப் படுவது காரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர்க் கொடுப்பக்கொள் வதுவே” (தொல்.பொரு.நூ.17)

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறிந்து கொள்ளலாம். மகளிர்க்குரியார் தம் மகளிரால் விரும்பப்பட்ட காதலர்க்குத் தம் மகளிரை மணம் செய்து கொடுத்தனர். பெற்றோரால் ஏற்றுக் கொள்ளப்படாத இருவரும் தம் பெற்றோர் உற்றார் அறியாமல் வேற்றிடஞ் சென்று மணஞ்செய்து கொள்வர். இதனை

“கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்துடன் போகிய காலை யான்” (தொல்.பொரு.கற்பி. -நூற்பா2)

என்ற தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கின்றது. ஒருப்பட்ட வழிப் பெற்றோரே. ‘சடங்கு’ மூலம் மணம் நடத்தி வைப்பர். காதலர்களிடையே வஞ்சித் தொழுகுதலும் பொய்யும் தலை காட்டின காலத்தில் தான் பண்டைத் தமிழ் சான்றோர் திருமணச் சடங்கை வகுத்தனர் என்பதனை,

“பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப” (தொல்.கற்பி - நூற்பா4)

என்ற நூற்பாவால் அறிந்து கொள்ளலாம். ஐயர் என்பது ஆரியர் என்ற சொல்லின் திரிபு அன்று. ஐயர் என்ற ‘ஐ’ என்பதன் அடியாகப் பிறந்ததாகும். ‘ஐ வியப்பாகும்” என்பது தொல்காப்பியம் (தொல்-சொல்-உரியி-நூற்பா 87) வியக்கதக்க குணமும் செயலும் உடைய முனிவரையே” குறிக்கும். இச்சொல் நாளடைவில் ஒரு குடும்பத்திற்குத் தலைவராய்க்-குலப்பெரியோரைக் குணத்திலும், செயலிலும் சிறந்தாரைக் குறிப்பிடும் சொல்லாக விளங்கிறது. மேற்குறிப்பிட்ட நூற்பாவின் மூலமாகப் பண்டைத் தமிழர்களின் திருமண முறைகளை அறிய முடிகிறது.

## பரிசமளித்தல்

“பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கும் வழக்கம் தொன்று தொட்டு தமிழர்களிடையே மரபாக வந்துள்ளது. அன்று இது முலைவிலை, சிறுவளை விலை, பரியம் என்று குறிப்பிடப்பட்டது. பாசிழை விலை என்றும் பெயர் உண்டு.” இதனை

“இருப்பிடம் படுத்த வடுவுடை முகத்த

கடுங்கண் கோசர் நியம மாயினும்

உறுமெனக் கொள்குனர் அல்லர்

நறுநுதலரிவை பாசிழை விலையே” (அகம். 90)

என்னும் பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் இதனை,

“சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணிஎம்

முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே” (நற். 300)

என்னும் பாடலடியும்,

“முழங்கு கடல் முழவின் முசிறி யன்ன,

நலஞ்சால் விழுப்பொருள் பணிந்து கொடுப்பினும்,

புரைய ரல்லோர் வரையலர் இவளென” (புறம். 345)

என்னும் சான்றுகளால் இதனை உணரலாம். மேலும் திருமண சடங்கை பற்றி திருமண செய்திகளை பற்றி முதன் முதலில் பதிவு செய்த இலக்கியமான அகநானூற்றில்,

“உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை

பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரை கால்

தண் பெரும் பந்தரத் தரு மணல்; ஞெமிரி

மனை விளக்குறுத்து, மாலை தொடரி,

கனை இருள் அகன்ற கவின்பெறுகாலை;

கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்

கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென,

உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,

பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர
புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று
வால் இழை மகளிர் நால்வர் கூடி,
'கற்பினின் வழாஅ, நற் பல நற் உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆக! என,
நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி" (அகம். பா.86, வரி. 1 - 15)
"துனைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேர் இறை முன்கை பற்றி, நுமர் தர,
நாடு அறி நல் மணம் அயர்கம்"(குறிஞ்சி-231-232)

## திருமணத்திற்குப் பொருத்தம் பார்த்தல்

"பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கும் வழக்கம் தொன்று தொட்டு தமிழர்களிடையே மரபாக வந்துள்ளது. அன்று இது முலைவிலை, சிறுவளை விலை, பரியம் என்று குறிப்பிடப்பட்டது. பாசிழை விலை என்றும் பெயர் உண்டு." இதனை,

"இருப்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியம மாயினும்
உறுமெனக் கொள்குனர் அல்லர்
நறுநுதலரிவை பாசிழை விலையே" (அகம். 90)
என்னும் பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் இதனை,
"சிறுவளை விலையெனப் பெருந்தேர்
பண்ணிஎம் முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே" (நற். 300)
என்னும் பாடலடியும்,
"முழங்கு கடல் முழவின் முசிறி யன்ன,
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையலர் இவளென" (புறம். 345)
என்னும் சான்றுகளால் இதனை உணரலாம்.

## நம்பிக்கைகள்

தொல்காப்பிய காலத் தமிழர்கள் மந்திரத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இன்றும் மக்கள் மந்திரச் சொற்களின் பொருளை அறிவதில்லை. அக்காலத்தில் பெரியோர்களால் சொல்லப்பட்ட பொருள்' தெரியாத சொற்களை மந்திரங்கள் என்று மக்கள் நம்பினார்கள். இதனை

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" (செய்யு-நூற்பா 71 (இளம்))
என்ற நூற்பாவால் அறிந்து கொள்ளலாம்.

எக்காரியங்களுக்கும் நல்ல நாள், கெட்ட நாள் பார்க்கும் வழக்கம் தமிழர்களிடமிருந்தது.

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை" (தொல்-களவி-நூற்பா 45 (இளம்)

என்ற நூற்பாவால் களவு காலத்தில் கெட்ட இராசியிலும் கெட்ட நாளிலும் தலைவியுடன் சேராமல் இருக்கும் ஒழுக்கம் தலைவனிடமில்லை என்பது தெரிகின்றது. எனவே, கற்புக் காலத்தில் காதலர்கள் தீய ஓரையிலும் தீய நாளிலும் மருவுதல் இல்லை என்பது தெளிவாகின்றது.

வெட்சி வீரர்கள் நிரை கவரச் சொல்லுங்கால் நற்சொல் கேட்டல் உண்டு. இதனை விரிச்சி என்று வழங்குவர். போர் செய்யப் புறப்படும் வேந்தன் குறித்த நேரத்தில் புறப்படத் தாமதமானால் அந்நேரத்தில் குடையையும் வாளையும் ஊருக்குப் புறத்தே அனுப்பி வைப்பான் என்பதை

"குடையும் வாளும் நாள்கோள்"

என்பதிலிருந்து அறியப்படும். சகுணம் பார்க்கும் வழக்கமும் தமிழர்களிடமிருந்தது.

"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்" (தொல்.புறத்-நூற்பா30)

என்ற சொற்றொடர் இதனைக் குறிப்பிடுகின்றது. தான் நினைத்த காரியம் நிறைவேறினால் 'இன்னது தருவேன்' என்று தெய்வத்தை வேண்டிக் கொள்ளும் வழக்கம் அவர்களிடமிருந்தது இக்காலத்தில் இதனைப் 'பிரார்த்தனை' என்றும் 'வேண்டுதல்' என்றும், 'நேர்த்திக்கடன்' என்றும் கூறுகிறோம். தொல்காப்பியர் இதனை "தெய்வக் கடம்" (கற்பி-நூற்பா 9) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் குறிஞ்சிப்பாட்டில் கடவுள் வழிபாடு எப்படி இருந்தது என்பதை

"பரவியும், தொழுதும், வரவு மலர்தூவியும்

வேறுபல் உருவின் கடவுள் பேணி.

நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று

எய்யா மையலை நீயும் வருந்துதி" (குறிஞ்சிப்பாட்டு5-8)

இப்பாடல் அடிகள் நமக்கு உணர்த்துகிறது. மேலும் முல்லைப்பாட்டில் முது பெண்கள் விருச்சி கேட்கும் பொழுது நற்றிணையில் பறவை நிமித்தத்தை கூறும் தலைவன் நம் வருகையைக் காக்கை முதலிய புள்ளினங்கள் அவருக்கு அறிவுறித்தினவோ என்று கூறுவதாகப் பாடலொன்று அமைகின்றது.

தோள்வழி யாப்ப ஈண்டுநம் வரவினைப்

புள்அறி வுறீஇயின கொள்ளோ தெளளிதின்" (நற்.161)

என்ற வரிகள் பறவை நிமித்தத்தை உணர்த்துகின்றன.

## காகம் கரைதல்

சங்க காலத்து மகளிர் நம்பிக்கையுடன் வாழ்ந்தனர். காகம் தம் இல்லத்தருகில் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை இருந்தது.

"பெருந்தோள் நெகிழ்ந்த செல்வதற்கு

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந்.210)

காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கையும் அக்காலத்தில் இருந்தமையை அறிய முடிகிறது. இன்றும் இந்த நம்பிக்கையை மக்கள் பின்பற்றுகின்றன.

## விலங்குகளின் சகுனம்

பழந்தமிழர் விலங்குகள் வாயிலாகவும் சகுனம் பார்த்து வந்துள்ளனர். பல்லி, ஓணான், கூகை போன்ற உயிரினங்கள் எழுப்பும் ஓசைக்கும் பலன் உண்டு என்பதை அறிந்துள்ளனர்.

## பல்லிச்சகுனம்

சங்க இலக்கியத்தில் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி தலைவன் வரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து நல்ல பலனை எதிர்நோக்கும் போது பல்லியும் ஓசை எழுப்பி அதற்கு இணக்கமான நல்ல நிமித்தத்தை ஒலிக்கின்றது.

"முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்

வருவம் என்னும் பருவரல் தீரப்

படும்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி" (நற்.பா.169-வரி.1-3)

வினைமுற்றி மீளும் தலைவன் தன் வருகையை பல்லி தலைவிக்கு அறிவிக்குமெனத் தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறான். அஃறிணை உயிரும் அஃறிணையான பல்லியின் சகுனத்தைப் பார்க்கின்றது.

## கண்துடித்தல்

பெண்களுக்கு இடதுகண் துடிப்பதைச் சங்க இலக்கியங்கள் நல்நிமித்தமாகக் கொண்டுள்ளன. கண் துடித்தல் தலைவன் வருகையை உணர்த்தும் நற்குறியாக அமைந்துள்ளது.

“நுண்ணோர் புருவத்த கண்ணும் ஆடும்

மயில்வார் முன்கை வளையும் செறுஉம்” (ஐங்.218)

என்று ஐங்குறுநூற்றுப் பாடல் விளக்குகின்றது.

நெல்லொடு, நாழி கொண்ட, நறு வீ முல்லை

அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது, 10

பெரு முது பெண்டிர், விரிச்சி நிற்ப(முல்லை பாட்டு-9-11)

ஆதித் தமிழ்குடி முதல் நம் அருந்தமிழ் தோன்றிய காலம் வரை நம்பிக்கைகள் சடங்குகள் நம் தமிழர்களிடம் நம்பிக்கையாக இருந்ததை காண முடிகிறது. மேலும் சிலப்பதிகாரத்தில் கனவுகள் மீது நம்பிக்கை இருந்ததை கூப்பிடுந்தேதி கண்ட மூன்று தீக் கனவுகள் நமக்கு சாட்சியாக இருக்கிறது மேலும் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்ற நம்பிக்கைகள் சிலபதிகாரத்தில் இருந்ததை உணர முடிகிறது எனவே நம்பிக்கைகள் மண்ணோடும் மக்களோடும் இருந்ததை நாம் அறிய முடிகிறது.

## குடும்பப் பொறுப்பில் ஒழுக்கம்.

இல்லறத்தை நடத்தும் பெரும் பொறுப்பு கணவனுக்கு வாழ்க்கைத் துணையாக நிற்கும் மனைவியிடம் இருந்தது. மனையின் கண் இருந்து மனையறம் நிகழ்த்தும் உரிமையுடையவள் மனைவி. மனை வாழ்க்கைக்குப் பாலிவினைத் தரும் மனைவியை,

“மனைக்கு விளக்காகிய வாணுதல்” (புறம் - 314

என்று புறநானூற்றுப் புலவர் பாராட்டுகிறார்.

இத்தகைய குடும்ப விளக்காகவும், இல்லத்தை ஆள்பவளாகவும் மனைவி இருப்பதால் ‘இல்லாள்’ என்றும் போற்றப்பட்டாள். கற்பொழுக்கத்தில் வாழும் பெண்ணின் பொறுப்பினை,

“கற்பும் காமமும், நற்பால் ஒழுக்கமும்,

மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்” (கற்பி - நூற்பா 11)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இதில் ‘விருந்து’ என்பது முன்பின் அறியாத புதியவர்கள் என்பதும், ‘சுற்றம்’ என்பது தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இல்லறம் இனிது நடைபெறுவதற்கு வேண்டிய செல்வத்தைச் சேர்ப்பது கணவனின் பொறுப்பாக இருந்தது. கணவனை இழந்தோர் பருத்திப் பஞ்சினை நூலாக நூற்றுத் தம் குடும்பத்தைப் பாதுகாத்தனர். இவர்கள் **“பருத்தி பெண்டிர்”** (புறம்-25,26) என்ற பெயரால் தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

தொல்காப்பியர் கருத்தை வலுப்படுத்தும் விதமாக நற்றிணையில்,

“கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்

கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்

ஒழுகுநீர் நுணங்கறல் போலப்

பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே!”(நற்-பா.110)

தலைவன் உயிரோடிருந்த போது விருந்து புறந்தந்த வளமனையை; அவன் இறந்த பிறகு அது வெறிச்சோடிக் கிடந்ததுடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

விருந்தயரப் பொருள் இன்றேல் அவ்வாழ்க்கை

திருந்தா வாழ்க்கை; அது நன்மையற்றது

என்று பெருங்குன்றூர் கிழார் (புறம்.- பா- 266) பாடுகிறார்.

“முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்

கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்

குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்

தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்

இனிதெனக் கணவ னுண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே” (குறு- பாடல்-167)

என்ற குறுந்தொகை பாடல் செல்வ செழிப்போடு வாழ்ந்த மகள் கணவனுக்கு நல்ல முறையில் சுவையாக சமைத்து போட வேண்டிய நோக்கத்தோடு சமையல் தெரியவிட்டாலும் அவற்றை ஆர்வத்தோடு கற்று தனக்கு தெரிந்த உணவுகளை சமைத்து கணவனுக்கு பரிமாறி அவரின் மகிழ்ச்சியை பார்க்கும் திறம் குடும்பம் நடத்துவதற்கு தகுதியுடைய தலைவியாக குறுந்தொகை தலைவி காட்சியளிக்கிறாள்.

## முடிவுரை

தொல்காப்பியர் காலத்தில் சமூக ஒழுக்கங்கள் எப்படி இருந்ததே என்பதை இல்லற வாழ்வில் ஒழுக்கம் சமூக ஒழுக்கம் பழக்க வழக்கங்கள் திருமண சடங்குகள் நம்பிக்கைகள் குடும்ப பொறுப்பில் ஒழுக்கம் என்ற கலங்களின் அவருடைய பார்வையிலும், இலக்கியப் பார்வையிலும் பார்க்கப்பட்டது ஒழுக்கம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது எனவே தான் வள்ளுவர் ஒழுக்கம் உயிரினும் ஓமப்படும் என்று பதிவிடுகிறார் ஒரு மனிதனுக்கு உயிராக இருப்பது மனிதனின் நல்ல நடத்தைகளும் நல்ல பழக்க வழக்கங்களும் நல்ல வளர்ப்புகளே ஒழுக்கத்திற்கு அடித்தளமாக விளங்குகிறது. இலக்கியங்களில் அகத்திணையில் ஒழுக்கம் புறத்திணைகள் ஒழுக்கம் அறத்தினையில் ஒழுக்கம் இல்லறங்களில் ஒழுக்கம் துறவரங்களில் ஒழுக்கம் சமூகங்களில் ஒழுக்கம் இப்படி ஒழுக்கங்கள் நிறைந்த வாழ்வில் தான் எல்லாம் ஒழுக்கமாக இருக்கும். எல்லாத் துறைகளிலும் ஒழுக்கம் இருந்து விட்டால் நாடு வளம் பெறும் நலம் பெறும் அந்த ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதற்காகத்தான் அறிஞர்கள் சங்க இலக்கியத்தை பக்தி இலக்கியத்தை அற இலக்கியத்தை சித்தர் இலக்கியத்தை இக்கால இலக்கியத்தை நாட்டுப்புற இலக்கியத்தை எல்லா இலக்கியங்களிலும் ஒழுக்கம் பெரிதும் போற்றப்படுகிறது ஒழுக்கத்தை கடைபிடிக்காத வாழ்வு சுகமாக இருக்காது என்பதற்கு இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் பல சான்றுகள் இருந்திருக்கிறது சான்றாக சிலம்பில் கோவலன் ஒழுக்கம் தவறி வாழ்ந்த வாழ்வில் பெரும் செல்வத்தை உயிரையும் விட்டதை நாம் அறிய முடிகிறது அதேபோல தான் மனிதர்கள் ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ்ந்தால் மனித சமூகம் விழுமியங்கள் நிறைந்த சமூகமாக மாறும். எனவே தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் மனித சமூகத்துக்கு மட்டுமல்ல ஓர் அறிவு முதல் ஆறறிவு உள்ளஎல்லா உயிரினத்திற்கும் ஒழுக்கத்தை கற்பித்தார்.

## References


தொல்காப்பியர், தொல்காப்பியம்-பொருளதிகாரம் (இளம் பூரணர்), கழக வெளியீடு.

திருவள்ளுவர், திருக்குறள் - பரிமேலழகர் உரை, கழக வெளியீடு.

வரதராசனார். மு, இலக்கிய ஆராய்ச்சி, பாரி நிலையம்.

ஐயனாரிதனார் (2002) புறப்பொருள் வெண்பாமாலை, கழக வெளியீடு, சென்னை.

நாகராசன், வி. (2004) குறுந்தொகை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.

.இராசமாணிக்கனார், ம. (2010) பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License